**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.585/2023**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் –திரு.சரவணன் **PW–2** தொழில் –

த/க பெயர் – வயது –

கிராமம் –

தாலுக்கா –

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:–</u>**

1) நான் ஈரோடு குறிஞ்சி நகர், R.N. புதூரில் குடியிருக்கிறேன். நான் ஈரோடு பவானி சாலையில் லட்சுமி நகரில் கந்தசாமி மில் கேட் அருகில் இளநீர் கடை வைத்து சம்பவ சமயத்திற்கு முன்பு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடத்தி வருகிறேன். தினமும் எத்தனை மணிக்கு கடை திறந்து மூடுவேன் என்றால் காலையில் 06.00 முதல் இரவு 07.00 மணி வரையில் கடை திறந்து வைத்திருப்பேன். 2021 ஆம் வருடம் இரண்டாவது மாதம் 24 ஆம் தேதி மாலை 06.00 மணி அளவில் நான் என் கடையில் இருந்த சமயம் எனக்கு தெரிந்த ஒரு நண்பர் வந்திருந்தார், அவருடைய பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. அப்போது ஈரோட்டில் இருந்து பவானி நோக்கி

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:52:31 +0530

ஒரு டாட்டா ஏஸ் வாகனம் வந்து கொண்டிருந்தது. அதற்கு முன்பாக ஒரு இருசக்கர வாகனம் வந்தது அந்த இருசக்கர வாகனத்தில் இரண்டு பேர் இருந்தார்கள். டாட்டா ஏஸ் வாகனம் அதிவேகமாக வந்து முன்னால் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தில் மோதியது இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து இருந்தவருக்கு தலையில் பலமான காயம் ஏற்பட்டது, இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றவருக்கு இடதுபக்க கை மற்றும் காலில் காயம் ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்திருந்த அவரின் பெயர் முத்தையன் ஆகும், முன்னால் இருந்தவரின் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. பின்னால் இருந்தவரின் பெயர் சரியாக சொல்ல முடியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி இரண்டு வாகனங்களின் பதிவு எண் சொல்ல முடியுமா என்றால் ஞாபகம் இல்லை. காயமடைந்த இருவரையும் ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம்.

2) டாட்டா ஏஸ் வாகனத்தின் ஓட்டுனர் பெயர் தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம் அவர் பெயர் கோபால், அவரை சம்பவ சமயத்தில் நான் பார்த்தேன் என்றால் ஆமாம். அவர் நீதிமன்றத்தில் இன்று வந்துள்ளாரா என்றால் ஆமாம் சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்.

3) தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். விபத்து நடந்ததற்கு மறுதினம் போலீஸ் வந்து விபத்து நடந்த இடத்தை பார்த்து

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:52:39 +0530

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தார்கள், அப்போது நானும் என் நண்பர் கணேசன் உடன் இருந்தோம், சாட்சி கையொப்பம் செய்தோம். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். வழக்கு சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரித்தனர்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**:-

1) மேம்பாலத்திற்கு முன்னால் சர்வீஸ் ரோடு உள்ளது என்றால் சரி. இந்த வழக்கில் புகார்தாரர் தன்னுடைய புகாரில் இரு சக்கர வாகனம் டாட்டா ஏஸ் இடது பக்க கண்ணாடியில் இடித்த பின்னர் இடது பக்கத்தில் பின்புற கம்பியில் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றும் நான் அதற்கு நேர் மாறாக டாட்டா ஏஸ் இருசக்கர வாகனத்தின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்னிடம் இருசக்கர வாகனம் தான் டாட்டா ஏஸ் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது என்று சொன்னால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.05 16:52:46 +0530

Chief Judicial Magistrate,
Erode.